# அல்லாஹ்வின் பார்வையில் பெரும்பான்மை

முஹிப்புல் இஸ்லாம்

கடந்த ஆயிரம் ஆண்டுகளாய், இந்த முஸ்லிம் உலகம் எண்ணற்ற பிரிவினைவாதிகளைக் கண்டு வந்துள்ள து. அவர்கள் பிரிவினைகளை நியாயப்படுத்தும் வாதங்களைக் கேட்டும், படித்தும் வந்துள்ளது. நன்கு சிந்திப்போம் எப்படியோ இந்த பிரிவினைவாதிகளின் கை பாவையாகி விடுகிறார்கள்.

பிரிவினைகளையும், பிரிவினை வாதங்களையும் நியாயப்படுத்தாத பிரிவினைவாதிகளைக் காண்பதரிது. அனைத்துப் பிரிவினைவாதிகளும் தாங்களோ ஒற்றுமைவாதி என்றும், தங்களோடு முரண்படுவோம் அனைவரும் பிரிவினைவாதிகள் என்று திடமாக வாதிட்டு வருகின்றனர்.

சிறு, சிறு குழுக்களிலிரந்து பெரும் கூட்டங்களைச் சேர்த்துள்ளவர்கள் அனைவரும்,, தாங்களே ஒற்றுமைவாதிகள் என்றும், மற்றவர்கள் பிரிவினைவாதிகள் என்றும் மனப்பால் குடிக்கின்றனர். இதுதான் இன்றைய முஸ்லிம்களின் யதார்த்த நிலை, இதுதான் இன்றைய முஸ்லிம்கள் ஒன்றினைவதற்குப் போடப்ப டும் மாபெரும் முட்டுக்கட்டை.

அனைத்து தரப்பினரும் ஒற்றுமை, ஒற்றுமை என்று ஒற்றுமையின் அவசியத்தை ஓங்கி ஒலித்துக் கொண் டிருக்கிறார்கள் ஏன்? தங்களை மக்கள் பிரிவினைவாதிகள் என்று இனங்கண்டு விடக்கூடாது என்பதற்காக ஒற்றுமை கோஷமிட்டு வருகிறார்கள். என்னதான் இவர்கள் இமாலய முயற்சி செய்தாம் சரி சில நேரங்களில் இவர்களையும் அறியாமல் இவர்களின் ஒற்றுமை வேஷம் கலைந்து விடுகிறது. சில நேரங்களில் அவர்கள் போட்ட ஒற்றுமை வேஷத்தை அவர்களே கலைத்துக்கொள்ளும் நிர்பந்தமும் ஏற்பட் டு வருகிறது.

இன்ரு ஒற்றுமைவாதிகள் என்று மார்தட்டிக் கொள்ளும் எவரும் ஒற்றுமைவாதிகள் அல்லர். பிரிவினைவாதிகளே! குறிப்பிட்ட நோக்கத்திற்காக குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக ஒன்று கூட்டப்படும் மக்களை த் தொலை காட்சியில் காட்டி ஒற்றுமைக்கு தற்போத புது விளக்கம் தருகின்றனர். நிச்சயம் இது ஒற்ருமையில்லை. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக ஒன்று திரண்ட மக்களை ஒரு வாதத்துக்கு ஒற்றுமையாள ர்கள் என்று எடுத்துக் கொண்டால் உங்களைக் காட்டிம் பன் மடங்கு பெரும் திறளாய் மக்களைக் கூட்டிக் காட்டும் அரசியல்வாதிகள் ஒற்றுமை வாதிகளா? இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஒவ்வொரு கால கட்டத்திம் பெரும்திரளான மக்கள் கூட்டம் தங்கள் பக்கம் இருப்பது கொண்டு வழிகேடர்கள் பெருமைப்பட்டார்கள்.

- **நபிமார்களும், பெரும்பான்மையான நிராகரிப்பாளர்களும்**

நபி நூஹ்(அலை) அவர்கள் காலத்தில், இஸ்லாமிய கொள்கையை ஏற்றோர் எண்ணிக்கையில் மிக குறைவு. பேர் எதிர்த்தோர் பெருங்கூட்டத்தாரால் என்னி நகையாடப்பட்டார்கள். இழிவுபடுத்தப் பட்டார்கள். பல காலம் சொல்லொன தொல்லைகளானார்கள் அந்தக் கூட்டத்தை அல்லாஹ் விட்டு வைத்தான். அவர்கள் திருந்தவில்லை. முடிவு, அந்த பெருங்கூட்டம் வெள்ளைப் பிரளயத்தால் அழிக்கப்பட்டது

அல்குர்ஆன் :

நபி நூஹ்(அலை) அவர்களைத் தொடர்ந்து வந்த பல நபிமார்கள் நிலையும் இதுதான். இறை நிராகரிப்பாள ர்கள் பெருங்கூட்டம் ஒருபக்கம் நபிமார்களுடன் ஈமான் கொண்டோர் சிறுபான்மையினர். தற்போது பெரும்பான்மையானவர்களுடன் மோதிக் கொண்டிருக்கும் நம் அனுபவங்களை இத்தனை கசப்பானதென்றால் முன் காலத்தவர் நிலை எப்படியிருக்கும்? எண்ணிப்பார்த்தால் நெஞ்சம் எரிமலையாகிவி டும். இறைதூதர் இப்ராஹிம்(அலை) அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் மிகவும் வித்தியாசமானது. சிலைகள் தயாரிப்பாளரான பெற்ற தந்தையின் எதிர்பைத் தொடர்ந்து மிகப்பெரும்பான்மையான அந்த மக்கள் உலகிலேயே இறைத்தூதர் இப்ராஹீம்(அலை) அவர்களுக்கு நரக தண்டனை விதித்தார்கள். அல்லாஹ் அந்த கொடிய நெருப்பிலிருந்து இறைத்தூதர் இப்றாஹீம்(அலை) அவர்களை காத்தருள் புரிந்தான். பெரும் திரளானவர்களின் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். பெரும்பாலானவர்கள் வழிகேடுகளை மதிப்பிழக்க செய்தான். (அல்குர்ஆன்)

நபி மூஸா(அலை) மனித சமுதாய வரலாற்றில் இந்த கொடியவனுக்கு நிகரான கொடியவனை எங்கும் காண முடியாது அந்த கொடுங் கொடியவன் வேறு யாருமல்ல. அவன்தான் ஃபிர்அவ்ன்! இந்தக் கொடுங் கொடியவனோடு தான் நபி மூஸா(அலை) அவர்கள் மோதினார்கள். நபி மூஸா(அலை) அவர்களைப் பெரும் எண்ணிக்கை நிராகரிப்பாளர்கள் அல்லாஹ்வால் அழிக்கப்பட்டார்கள். இதை நாம் மேல் எடுத்துக் காட்டியுள்ல நபிமார்கள் கால நிகழ்வுகள் மெய்ப்பிக்கின்றன. இதிலிருந்து படிப்பினை பெற வேண்டிய இன்றைய முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள்?

இஸ்லாத்தை உதட்டளவில் ஏற்று, உள்ளத்தாம், செயலாம் இஸ்லாத்திற்கு மாறு செய்து வருவது இன்றைய பெரும்பான்மை முஸ்லிம்களின் யதார்த்த நிலை. சர்வேதச அளவில், இஸ்லாமியர் அடிபிறழாமல் வாழும் முஸ்லிம்கள் எண்ணிக்கை மிக, மிக குறைவே! இதை இறுதி இறை வேதம் இப்படி எடுத்துக்காட்டுகிறது.

**“(ஓ! மனித சமுதாயமே! நிங்கள்) உங்கள் இறைவனால் அருளப்பட்டதை மட்டும் பின்பற்றுங்கள். மற்றவர்களைப் பாதுகாவலர் களாக்கி, அவர்களைப் பின்பற்றாதீர்கள். உங்களில் குறைவானவர்களே நல் ணர்வு பெறுகிறீர்கள்”.** ***அல்குர்ஆன் 7:3***

சர்வதேச அளவில் பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உள்ளனர். பல்வேறு நிலைகளில் முஸ்லிம்கள் இழிவுக்கும், அழிவுக்கும் உள்ளாகியும் வருகின்றனர். பெரும் எண்ணிக்கை, இப்போது பயனற்றதாகி விட்டது. ஏன்? கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையா? முஸ்லிம் இறையருளியதைப் பின்பற்றவில்லை. அப்படி முஸ்லிம்கள், இறைவன் அருளியதைப் பின்பற்ற முன் வந்து விட்டால், வெற்றியும் தானே தேடிவரும் இதைப் பத்ரு யுத்தம் என்று காட்டுகிறது. நபியுடன் படை பலமும், ஆயுத பலமும், மோதிய பயிற்சியுமில்லாத 313 நபிதோழர்கள் ஆயிரக்கணக்கான ஆயுத படை பலத்துடன் நன்கு பயிற்சி பெற்ற எதிரிகளை வீழ்த்தினர். இந்த வெற்றியை அல்லாஹ் ஏன் அவர்களுக்கு அருளினான்? இறையருளியதை அவர்கள் முழுமனதுடன் பின்பற்றினார்கள்.

அதே நேரத்தில் உஹது யுத்தத்தில் நபி(ஸல்) அவர்களின் பல் உடைந்தது ஏன்? நபியவர்கள் எதரிகள் நுழைந்து விடமல் தடுக்க, எது நிகழ்ந்தாம் இந்த கணவாயை விட்டு யாரும் அசையக்கூடாது என்று

கட்டளைப் பிறப்பித்திருந்தார்கள். வெற்றியின் அறிகுறிகள் தெரியலாயின. நபியவர்கள் கட்டளையைக் காற்றில் பறக்க விட்டார்கள். கணவாயை விட்டு விட்டு உள்ளே நுழைந்தார்கள். எதிரிகள் எதிர்பார்த்த சந்தர்ப்பம் உள்ளே சென்ற எதிரிகள் நபி(ஸல்) அவர்கள் பல்லை உடைத்து விட்டார்கள். பல் உடைந்து வேதனை ஒரு புறம். தங்கள் கட்டளைக்களுக்கு மாறு செய்து விட்டார்களே என்ற வேதனை மறுபுறம், முஸ்லிம் தோல்வியைத் தழுவினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கட்டளைக்கு மாறுபடுவோர், எவராக, எந்த காலத்தவராக இருப்பினும் சரி. அவர் இஸ்லாத்திற்குத் தோல்வியையும், நபி(ஸல்) அவர்களை ஊமைப்படுத்தியமாவன். இதை உஹுது நிகழ்ச்சி உறுதிப்படுத்துகிறது. அணி மனப்பான்மைக்கும், குழு மனப்பான்மைக்கும் பெயர் போன இன்றைய முஸ்லிம்கள் பிரிவுகளையும், பிரித்தலையும் அன்றாட வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மற்ற தவறுகள் போல் பிரிதலையும், பிரித்தலையும் நியாயப்படுத்துவதில், முஸ்லிம்கள் முன்னணியில் இருக்கிறார்கள். விளைவு தங்கள் மத்ஹப், தங்கள் தரீக்கா, தங்கள் அமைப்பு, தங்கள் இயக்கம், தங்கள் ஜமாஅத் என்று அவைகளை வளர்க்க அவைகளை சார்ந்தோர் போட்டியிடுவதையும் பார்க்கிறோம். உடல், பொருள், காலம் முதலியன அவைகளுக்காக பெருமளவில் விரயம் செய்யப்படுகின்றன. இதனால் முஸ்லிம்கள் சிதரடிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. ஒவ்வொரு அணியினரும், குழுவினரும் தாங்கள் பெருங் கூட்டமாய் இருப்பதாக காட்டிக் கொள்ள சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

இதில் தாங்கள் மற்றொருவற்க்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை தவ்ஹீத்வாதிகள் நிலை நாட்டி வருகிறார்கள். முன்னரே பிரிவிம், பிளவிம் சிக்கித் தவிக்கும் முஸ்லிம்களைத் தங்கள் பங்கிற்குத் துண் டாடினார்கள். இயக்கங்கள், அமைப்புகள், கட்சிகள், ஜமாஅத்கள் இல்லாமல் செயல்பட முடியாது என்ற பிரிவினை வாதத்தைத் தந்திரமாய் தவ்ஹீத்வாதிகளிடம் திணித்தார்கள். மீண்டும் கண்மூடித்தனத்திற்கு தள்ளப்பட்டார்கள் தவ்ஹீத்வாதிகள்.

கருத்து வேருபாடுகள், டிரஸ்ட் குற்றச்சாட்டுகள், அமானித மோசடி என்று தவ்ஹீத்வாதிகளுக்குள் தொடர்ந்து மோதல் வத்து கொண்டே செல்கிறது. தனித்தனி அமைப்புகளாய், தனித்தனி இயக்கங்களாய், தனித்தனி ஜமாஅத்துகளாய் பிரித்தும், பிரிந்தும் செல்வதை அன்றாட வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவாரும் தங்களிடம் தான் பெருங்கூட்டம் சேர்க்க படாத பாடுபட்டு வருகிறார்கள். இவர்களை யும் பெருங்கூட்ட கவர்ச்சி விட்டு வைக்கவில்லை.

டிசம்பர் 2005 அந்நஜாத்